நல்லிணக்கத்திற்காக இடம் பெறும் முயற்சிகளைப் பற்றி இலங்கை மக்களுக்கான எனது செய்தி

மொற்றோ நுகுச்சி (ஜப்பான்)1

2017. 10. 31

நான் இந்நாட்டிற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பணிகாரணமாக வருகை தருகின்றேன். ஆனால் கீழேயுள்ள எனது செய்தி எனது தனிப்பட்டதொன்றாகும். அது நிபுணரொருவரான எனது இன்றைய உறுதிப்படுத்தப்படாத அவதானிப்புக்களை பிரதிபலிக்கின்றது. அத்துடன் அது ஜப்பானிய அரசாங்கத்தின் நோக்குகளையும், நிலைகளையும் கட்டாயமாக பிரதி பலிக்கவில்லை. நல்லிணக்க முயற்சிகள் இலங்கையின் முழு மக்களுக்கானதாகும் எனவும், அவர்களுக்கு சமமானதொரு முறையில் பயனளிக்கும் நோக்கத்தையுடையது என்பதை தெரிந்து கொள்வது இக்கட்டான விடயமுமாகும்.

இப் பொறிமுறையானது இலங்கையின் தமிழ் மக்கள் போன்ற ஒரு பகுதியினருக்கு மட்டுமே பயனுள்ளதாகவிருக்கும் என சில பிழையான விளக்கமிருக்கலாம். ஆனால் அது அவ்வாறில்லை. அத்துடன், இவ்வாறான முயற்சிகள் முன்னர் இடம் பெற்றிராத காரணத்தால், இடைக்கால நீதி, பொறுப்புக்கூறல் போன்ற பரீட்சயமற்ற சில வெளிநாட்டு சொற்களின் தப்பான விளக்கத்தின் காரணமாகவிக்கலாம். உண்மையில், ஜப்பானிலும் கூட இச் சொற்கள் வழக்கிலில்லை. நாங்கள் இச் சொற்களுக்கு ஜப்பானிய மொழியில தானும் நேரடி சமமான மற்றும் இயற்கைரீதியான மொழி பெயர்ப்பை காணவேண்டியுள்ளது. இச் சொற்களை பாவியாது நல்லிணக்கத்தைப் பற்றிய எனது விளக்கத்தை விளக்குவதற்கு முயற்சிப்பேன்.

20ம் நூற்றாண்டின பிற்பகுதியில், இலங்கை துக்ககரமான வன்செயல் கட்டத்திலும், யுத்தத்திலும் ஈடுபட்டதுடன் இறுதியாக அது 2009ல் முடிவுற்றது. அதிலிருந்து, இலங்கை அரசாங்கமும், மக்களும், ஐக்கியமான, சமதானமுடையதுமான, வளமான நாடொன்றை மீள்கட்டியமைக்க கவனத்தைச் செலுத்துகின்றார்கள். நீடித்த வன்செயல் மற்றும் யுத்த காலத்தில், அநேகமான மக்கள் இனம் அல்லது சமயம் பாராது கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். உண்மையில் கடுமையான பாதிப்புக்கள் முழு நாட்டிற்கும் பரவின. ஆனால் இத் துயர கட்டம் முடிவுற்று, தற்போது நீங்கள் உங்கள் நாட்டை மீள்கட்டியமைக்கின்றீர்கள்.

ஓர் ஆரம்ப படியாக, மேலும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்காக மாறாத

முயற்சிகளுடன், முதன்மைப்படுத்துவதற்காக பல விடயங்கள் உள்ளன. முதலாவது, இதுவரையும் காணாமல் போனோரின் விதி, அவர்களின் இருப்பிடங்களையும் கண்டறிந்து அவர்களின் குடும்பத்தினருக்கு மேலும் தாமதம் இல்லாது தெரியப்படுத்தல் வேண்டும். இரண்டாவது, கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் கண்ணியத்தையும், நம்பிக்கையும் மீள்பெறவும் புது வாழ்வொன்றை ஆரம்பிக்கவும் நிவிர்த்தி செய்யப்படல் வேண்டும். மூன்றாவது, இக் கடுமையான பாதிப்புக்களுக்கு பொறுப்பாகவிருந்தவர்களுக்கு சட்டத்தின் படியும், நம்பத்தக்க சாட்சியத்திற்கு ஏற்பவும் தீர்ப்பளிக்கப்படல் வேண்டும். நான்காவது, நாட்டின் சகல சமூகத்தவர்களும் சமாதானமும், சுபீட்சமுள்ள நாட்டைக் மீள்கட்டியமைக்கவும், கடந்தகால துயர சம்பவங்கள் மீண்டும் இடம் பெறுவதைத் தவிர்க்கவும் ஒன்றினைதல் வேண்டும்.

மேலேயுள்ள நோக்கங்களை அடைவதற்கு, நல்லிணக்க பொறிமுறைகள் நான்கு தூண்களைக் கொண்டுள்ளன: உண்மை, நீதி, இளப்பீடுகள், மற்றும் மீள் இடம்பெறாமை. அவைகள் எல்லாம் நாட்டை மீள்கட்டவும், ஐக்கியமானதும், சமாதானமும் உள்ள நாட்டிற்கான நிலைபேறான பொருளாதார அபிவிருத்திற்கு அடித்தளமிடுவதற்கு சமமாக முக்கியமானவைகளாகும். இது தற்போதைய இலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது, உங்களின் சந்ததியினாரான பிள்ளைகளுக்கும் அதி முக்கியமானதுமாகும். நீங்கள் உங்களின் பிள்ளைகளை, நீங்கள் அனுபவித்த சகல துயரச் சம்பவங்களுக்கும் முகம் கொடுக்க செய்யலாகாது.

இது நல்லிணக்கம் யாதெனக் கருத்துப்படும் என்பதையிட்ட எனது நோக்காகும். இது ஒரு இலகுவான விடயமாகும். இது இலங்கை எல்லா மக்களினதும் பொதுவான நம்பிக்கை என நான் நம்புகின்றேன். இதனை நீங்கள் மேலோட்டமாக இக்கட்டான அல்லது இலங்கை கலாச்சாரத்திற்கு வெளியானதொன்று எனக் நோக்கத் தேவையில்லை. நான்கு தூண்களுக்கும் இடையில், பொறுப்புக்கூறல் பொறிமுறை அல்லது குற்றவியல் வழக்குத் தொடருதல் மிகவும் அரசியல் ரீதியாக உணர்ச்சிமிக்க பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இதனை கலந்துரையாடலின் கீழுள்ள விசேட நீதிமன்றம், நியாயசபை ஆகியன முழு சனக் குடியிலும் ஒரு பகுதியினருக்கு மட்டுமே - மிகவும் வெளிப்படையாக தமிழ் மக்களுக்கு மட்டுமே பயனளிக்கும் என்பதையிட்டு பெரிதாக வெளிவரும் விளக்கமின்மை என நான் காண்கின்றேன்.

இது ஏனெனில், அதிகமான மக்கள், குறிப்பாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர், இப் பொறிமுனை யுத்தத்தின் போது இராணுவத்தினால் புரியப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட யுத்த குற்றங்களை குற்றஞசாட்டவும், அதே வேளை விடுதலைப் புலிகள் பக்கத்தினரால் புரியப்பட்ட குற்றங்களை கருத்திலெடுக்காது விடுவதற்குமான அவையொன்றாகக் காண விளைகின்றனர். இதன் விளைவாக, பொறுப்புக்கூறல் பொறிமுறை அமைப்பு முறையில் ஒரு பக்கசார்பானதொன்றெனவும், அது யுத்த மாவீரர்களை தண்டிக்கும் இயல்பை கொண்ட அநீதியான அவையென என காண முயல்கின்றார்கள்.

இது அப்படியானதொன்றல்ல என நான் நினைக்கின்றேன். ஏனெனில் இப் பொறிமுறை மக்களின் கடுமையான பாதிப்புக்களுக்கு பொறுபாயிருந்தோர்களை அவர்களின் இனம் அல்லது சமயம் ஆகியவற்றைப் பாராது, குற்றஞ் சாட்டவும், அதனால் பாதிப்படைந்தோர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் சமூகங்கள் ஆகியவற்றிக்கு நீதி வழங்கவும் முனைகின்றது. வழக்குகளின் தெரிவுகளின் பிரமாணங்கள் பிரதான குற்றத்தின் பாரதூரத்தன்மையாகவிருத்தலேயின்றி, யார் குற்றத்தைப் புரிந்தார்கள் என்பதாகவிருத்தலாகாது. இதுவே சட்ட நியதியின் படி, சரியாக யாதெனக் கருதப்படுவதுடன், இங்கு அரசியலுக்கு இடமில்லை. இதனை வேறுவிதமாகக் கூறின், நீதியாதிக்க பொறிமுறை இலங்கையின் சகல மக்களுக்கும் நீதியானதும், சமமான முறையிலும் பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, கட்டமைத்து, செயப்படல் வேண்டும்.

இந் நீதியாதிக்க பொறிமுறையால் கவனத்திலெடுக்கப்படும் குற்றங்களின் தன்மையின் முக்கியத்துவம் மற்றும் ஒழுங்குள்ள நியாயாதிக்கம் ஆகிய இரண்டின் பிரகாரம் கவனமாகக் கருத்தில் எடுக்கப்படல் வேண்டும். ஏனெனில், இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியை வழங்குவதின் வெற்றிக்கு முக்கியமாக, நீயாதிக்க பொறிமுறைக்கான ஆதரவையும், உண்மையான பங்குபற்றலையும் உறுதி செய்வதற்குரிய இக்கட்டான அம்சமாகும்.

விசேட நியாயாதிக்க பொறிமுறை, இராணுவ படைகள் உள்ளடங்கலாக சில நிறுவனங்களின் கூட்டு பொறுப்பை ஆராய்வதற்கான ஒரு அவையல்ல என்பதை தெரிந்திருப்பது முக்கியாமானதாகும். அதற்கு மாறாக, குற்றத்திற்குப் பொறுப்பான தனிநபரை இனம் கண்டு, அதனால் சில நபர்களுக்கு எதிராக தண்டனைகள் வழங்குவதையும், அதே வேளை ஏனையோரை அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிருபிக்காததினால் விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அவர்களுக்கெதிரான குற்றஞ்சாட்டலுக்கு எதிராக நீதி செயல்முறையின் கீழ் வெற்றிகரமான

வழக்காடலினால் அல்லது குற்றங்களை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிப்பதற்கான சாட்சியங்கள் இல்லாமையால் விடுதலை செய்யப்படுவதற்கு எதிர் வாதிட உரிமையுடையவராவர்கள்

பொறுப்புக் கூறல் பொறிமுறையினைச் சுற்றிய கலந்துரையாடலில் சர்வதேச நீதிபதிகள் பற்றிய வினாவிற்கு கவனம் செலுத்தப்பட்டது. எனது கருத்துப்படி, நீதிபதிகளின்தேசியம்முக்கியமாகவில்லாது,நீதிபதியாகசேவையாற்றும்தனிநபர் எல்லா சமூகத்தினராலும் ஆதரவு வழங்கப்படக்கூடியவராகவும், மக்கள் வழக்குகளின் விதியை அவரின் மதிநுட்பம் தொழில்சார் நிபுணத்துவம் ஆகியவற்றிக்கு விடுவதை விரும்புகின்றார்கள் என்பதே மிக முக்கியமானதாகும். இதைவிட மிகவும் முக்கியமானது ஏதெனில், ஏதேனும் பின்தொடரும் நீதி விசாரணைகளை கருத்துள்ளதாக்குவதற்கு, நீதியானதும், தேர்ச்சியானதுமான திறனாற்றலுள்ள விசாரணைகளைப் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். உயர் தரமான விசாரணைகள் இல்லாது, மிகவும் திறமை வாய்ந்த நீதிபதிகளினாலும் அதிகமானவற்றைச் செய்யமுடியாது.

துயரம் தரும், சிக்கலான குற்றத்தைச் சாட்டி, நீதி விசாரணைகளுக்கு உள்ளாவதை விடுத்து, கடந்த கால நிகழ்வுகளை மறந்து, எதிர் காலத்தை நோக்குவது சிறந்தது என சிலர் வாதிடலாம். எவ்வாறாயினும், அவ்வாறான அணுகுமுறை தண்டனையற்ற கலாச்சாரத்தை காத்திரமாக அங்கீகரிப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கத் தவறுவதுடன், அவ்வாறான குற்றங்களும், துயரங்களும் மீள நிகழும் ஆபத்தை அதிகரிப்பதுடன் முடியும் என நான் நினைக்கின்றேன். ஜனநாயம் நிறுவபப்பட்ட நாடாகிய இலங்கை , சட்ட விதிகளை சட்ட நூல்களை மட்டுமல்லாது, நியாயாதிக்கத்தின் உறுதியான நடவடிக்கை ஊடாகவும் கடைப்பிடித்தல் வேண்டும்.

இறுதியாக, அரசாங்கம் ஒன்றின் ஆற்றல் அதன் மக்களை சட்ட விதிகளை கடைப்பிடித்து பாதுகாப்பது என்பதாகும். அது தேசிய அரசாங்கம் ஒன்றின் அத்தியாவசிய உட்கட்டமைப்பில் ஒன்றாகும். நீர், சுகாதாரம், கல்வி, பேக்குவரத்து, நிதி முறைமைகள் போன்ற சமூக உட்கட்டமைப்பின் இக்கட்டான கூறுகள் போன்றே அடிப்படை கொள்கையுடைதும், திறமைமிக்கதுமான நீதித்துறை ஜனநாய தேசத்தின் முக்கிய கூறாகும். இலங்கைக்கு நிலைபேறான பொருளாதார அபிவிருத்திற்கும், சுபிட்சத்தையும் நோக்கி முன்னேறுவதற்கு பெரும் அடிகள் வைக்க உறுதியானதும், தீர்க்கமானதுமான சட்ட விதிகள் முக்கியமானதாகும்.

ஜப்பான் இலங்கையின் நீண்டகால நண்பனாகும். சுமார் எழுபத்தைந்து

வருடங்களுக்கு முன்னர், யுத்தத்தின்பிடியிலிருந்து, நாட்டைக் மீள் கட்டியையமக்க ஜப்பான் அவதியுறுகையில், ஜப்பானை சர்வதேச சமூகத்திற்கு மீளுவதற்குரிய அதன் முயற்சிகளுக்கு உறுதியாக ஆதரவளித்த நாடுகளில் இலங்கையாகும் முதலாவது நாடுகளில் ஒன்றாகும். தற்போது இலங்கை கடந்தகால துயரங்களை விட்டு நீங்கி முன்னோக்கி நகரத் தீர்மானித்திருக்கையில், ஜப்பானிய பிரசையாகிய நான், இந் முன்னர் இடம்பெறாத முயற்சியில் உங்களுக்கு எவ்வித உதவியையும் அளிக்க மிகவும் கௌரவமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எனது நண்பர்களுக்கு நன்றி.

---

1. ஜப்பானின் உயர் வழக்குத்தொடுநர் அலுவலகத்தில் வழக்குத்தொடுநர்; இயக்குனர்கள் சபையின் தலைவர், பாதிக்கப்பட்டவர்களுக்கான நம்பிக்கை நிதியம், சர்வததேச குற்றவியல் நீதிமன்றம்: கம்போடியா கெஹ்மூர் ரோக் விசாரணைகளில் முன்னைநாள் ஐக்கிய நாடுகள் சர்வதேச நீதிபதி, முன்னைநாள் குற்றத்தடுப்பு மற்றும் குற்றவாளிகளை பேணுவதற்கான ஐக்கிய நாடுகள் ஆசியா மற்றும் தூரகிழக்கு நிறுவகத்தின் (UNAFEI) பேராசிரியர், ஜப்பான் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வருகைதரும் பேராசிரியர்; முன்னைநாள் வழக்குரைஞர், பொதுவழக்குரைஞர் அலுவலகம், ஆசிய அபிவிருத்தி வங்கி.